# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 88/2015**

பெயர் : நடேசன் நாள் : 07.06.2023

வா.சா.1 – பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1 – நடேசன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 12.21</u>

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் மட்டுந்தான் வழக்கு சொத்தின் சர்வே எண்ணாண 78/5X குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் வழங்கியது என்றால், சரிதான். அந்த ஆவணம் 05.10.1987 ம் ஆண்டு பெறப்பட்டது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் 11 வரையிலான ஆவணங்கள் கந்தாய ரசீதுகள் என்றால், சரிதான். கந்தாய ரசீதுகளில் பட்டா எண் மட்டுந்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு சர்வே எண் 78/5X ஆனது தனக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். UDR ன்கீழ் வழங்கப்பட்ட பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேன். அதுதான் வா.சா.ஆ.1 ஆவணம் என்றால், எனக்கு குறிப்பாக கூற முடியவில்லை.

2) வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்பதை குறிப்பிடுவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆனால் பொய்யாக ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறேன் என்று சொன்னால், சரியல்ல. வழக்குரையில் 3 வது பத்தியில் வழக்கு சொத்தில் 25 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டிடம் கட்டியுள்ளதாக கூறியுள்ளேனா என்றால், கூறியிருக்கலாம், ஞாபகமில்லை. கட்டிடம் கட்டியதற்கான ஆதாரம் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கட்டிடத்தில் நான்தான் அனுபவத்தில் உள்ளேன் என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்று தெரியவில்லை. சர்வே எண் 78/5X ல் ஒரு கட்டிடம் உள்ளதா என்றால், உள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்தில் பிரதிவாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றாலும், அந்த விபரத்தினை தெரிந்து கொண்டே பொய்யாக தெரியாது என்று சொல்கிறேன் என்றால், சரியல்ல.

3) பிரதிவாதி எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி குடியிருக்கும் இடம் தெரிந்துதான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால், பெயரை வைத்துதான் போட்டேன். கடந்த 30.12.2013 ம் தேதியில் எங்கள் ஊரை சேர்ந்த கந்தசாமி மக்கள் சபரிநாதன், மணிகண்டன் ஆகியோர்களிடமிருந்து சர்வே எண் 78 ல் நிலம் கிரையம் பெற்றுள்ளேன் என்று சொன்னால், சரிதான். அதில் வெங்கடாசலம் என்று சாட்சி கையொப்பம் இட்டுள்ளது பிரதிவாதிதான் என்று சொன்னால், அதை ஆவண எழுத்தரிடம்தான் கேட்கவேண்டும். ஆவணம் ஏற்படுத்தும்போது அந்த ஆவணத்திற்கு சம்பந்தப்பட்ட நபர்கள்தான் சாட்சியை அழைத்து செல்வது வழக்கம், இருப்பினும் எழுத்தருக்குதான் தெரியும் என்று கூறி சாட்சியம் அளிப்பது ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. மேற்கண்டவைகளை ஒப்புக்கொண்டால் அது நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எதிராக சென்றுவிடும் என்பதால், தெரிந்த விசயங்களை தெரியாது என்று கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

4) பிரதிவாதி வழக்கு சொத்தில்தான் குடியிருந்து வருகிறார் என்றாலும், அதனைதான் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், ஆனால் அதை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு சர்வே எண் குறித்து என்னுடைய பட்டாவில் இருந்து பிரதிவாதியின் பட்டாவிற்கு மாற்றிய விபரம் 2015 ல்தான் தெரியும் என்று சொன்னால், சரியல்ல. நான் சர்வே எண் 78/5B ல் வீடு கட்டுவதற்காக கலைஞர் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கு மகுடஞ்சாவடி வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கடந்த 2011 ம் ஆண்டு விண்ணப்பம் செய்து வீடு கட்டியுள்ளேன் என்றால், சரிதான். அந்த விண்ணப்பத்துடன் பட்டா எண் 266 ஆவணத்தையும் இணைத்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால், பத்திரத்தைதான் கொடுத்துள்ளேன். பிரதிவாதி நான் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கொடுத்த விண்ணப்பத்தின் நகல் மற்றும் ஆவணங்களை கேட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் ஒரு மனு அளித்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் அதற்கு ஆட்சேபனை கூறி, ஆட்சேபனை மனு கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். அந்த ஆட்சேபனையில் பட்டா ஆவணத்தை அளிக்கக்கூடாது என்று குறிப்பாக ஆட்சேபனை செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

5) தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் மேல்முறையீடு மாநில மையத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால், அதுகுறித்து எனக்கு தெரியாது. நான் ஆஜராகி பட்டா ஆவணத்தை பிரதிவாதியிடம் கொடுக்கக்கூடாது

என்று ஆட்சேபனை செய்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சர்வே எண், பட்டா எண் 266 ல் இல்லையென்ற விபரம் 2011 ம் ஆண்டே எனக்கு தெரியும் வரும் என்றாலும், அவ்வாறு தெரிய வரும் என்ற விபரத்தை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தினால், அது நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எதிராக அமைந்துவிடும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் இந்த வழக்கு நிலுவையில் இருந்துவரும் நிலையில், கடந்த 2020 ம் ஆண்டில் வழக்கு சர்வே எண்ணை பட்டா எண் 266 ல் சேர்க்கவேண்டும் என்று கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். நானும் எனது சகோதரர் கிருஷ்ணன் என்பவரும் சேர்ந்த கொடுத்துள்ளோம். கிருஷ்ணன் கொடுத்த மனு பட்டா எண் 118 க்கு சம்பந்தப்பட்டது என்றால், சரிதான். அந்த பட்டா எண்ணிற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று சொன்னால், சரிதான். நான் கொடுத்த மனுவின் பேரில் சங்ககிரி கோட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றது என்றால், சரிதான். அந்த விசாரணையின்போது கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் புலத்தணிக்கை செய்தார்கள் என்றால், சரிதான்.

6) புலத்தணிக்கை செய்து அளித்த அறிக்கையில் கோவிந்தன் மகன் வெங்கடாசலம் வழக்கு சர்வே எண்ணில் இரு தார்சு வீடுகள் கட்டி குடியிருந்து வருவதாக கூறியுள்ளார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் பின்னிட்டு நான் அளித்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருவதாக கூறிதான், நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு மனுவை முடித்துவிட்டார்கள். உத்தரவை எதிர்த்து சேலம் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்துள்ளேன்.

7) சர்வே எண் 78 ல் பல உட்பிரிவுகள் உள்ள நிலையில், அதில் தவறுதலாக உள்ள ஓரிரண்டு தவறுகளை சாதகமாக்கி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. பட்டா எண் 118 ல் உள்ள சர்வே எண்களான 84/1D, 2F ஆகியவை எனது சகோதரர் கிருஷ்ணன் பெயரில் பட்டா இருந்தாலும், அனுபவம் என்னிடம் இருந்தது என்று சொன்னால், என்னுடைய சொந்த நிலத்தை விற்றுவிட்டேன். சர்வே எண்கள் 84/1D, 2F ல் உள்ள நிலத்தை 28.03.2005 ம் தேதியில் நானும் எனது மகன் மற்றும் மகள் எனது சகோதரரின் மனைவி பழனியம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்று சொன்னால், சரிதான்.

அவ்வாறு செய்தது பட்டாவில் உள்ள தவறை சரி செய்வதற்காக செய்த ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

7) சர்வே எண் 78/5V, 78/5W, 78/9B ஆகியவைகளின் அனுபவம் ஒருவரிடமும், பட்டா வேறு ஒருவரின் பெயரில் உள்ளது என்று சொன்னால், சரியல்ல. மேற்படி தவறுகளை வைத்துதான் இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு 129/2015 என்ற வழக்கை எனது சகோதரர் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால், சரியல்ல. நானும் பிரதிவாதியும் ஒரு கோணக்கவுண்டரின் வழி தோன்றல்கள் என்றால், சரிதான். கோணக்கவுண்டருக்கு பெருமாள்கவுண்டர், வேங்காகவுண்டர், சீரங்ககவுண்டர், ராமசாமிகவுண்டர் என்று 4 மகன்கள் என்றால், சரிதான். பிரதிவாதி வெங்கடாசலம் பெருமாள்கவுண்டரின் வழித்தோன்றல் என்றால், சரிதான். நான் ராமசாமிகவுண்டரின் வழித்தோன்றல் என்றால், சரிதான்.

8) கோணக்கவுண்டருக்கு பெருமாள்கவுண்டர், வேங்காகவுண்டர், சீரங்ககவுண்டர், ராமசாமிகவுண்டர் முறைப்படி வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றாலும், அதனை ஆவணமாக எழுதிக் கொள்ளவில்லை என்றாலும், சரிதான். அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில்தான் எனது தகப்பனாரும், அதன் பின்னிட்டு நானும் அனுபவம் செய்து வருகிறோம் என்று சொன்னால், சரிதான். மற்ற குடும்பத்தாரும் எங்களைப்போல் அனுபவத்து வருகிறார்களா என்ற விபரம் எனக்கு தெரியாது.

9) சர்வே எண் 78ல் எனது தாயார் 12ல் 1 பங்கு கிரையத்தை பெருமாள்கவுண்டர் மற்றும் சீரங்ககவுண்டர் வகையறாவிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால், சரிதான். எனது தாயார் பெற்ற கிரையப் பத்திரத்தில் பொதுவில் என்று குறிப்பிட்டுள்ளதை வைத்துக்கொண்டுதான், இந்த சர்வே எண்ணில் குழப்பத்தை விளைவிக்கவேண்டும் என்பதற்காக சர்வே எண் 78ல் பல உட்பிரிவுகளில் உள்ள நிலத்தை எனது தாயாரிடமிருந்து நான் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொண்டுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு முன்பாக எந்த பிரச்சனையும் இல்லாமல் இருந்தது வந்தோம் என்றாலும், அதன் பின்னிட்டுதான் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால், சரியல்ல. அதனால் இந்த வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு சர்வே எண் 78/5X ல் உள்ள நிலத்தை

ஒருபோதும் அனுபவித்து இல்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதியின் தகப்பனார் மற்றும் பிரதிவாதி தார்சு வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.